REGD: No. M. 6311

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 253

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY ! THE OFFICIAL ORGAN OF: T'HE D.P.F

சென்னை: பங்குனி 25உ புதன் (7—4—54) ★ ★ ★ வெளியூர்: பங்குனி 26உ வியாழன் (8—4—54)

அடிமை விலங்கு உடைந்தோடுகிறது

அந்நியர் சரணடலுக்கு இனியும் இடமில்லை

'பிரெஞ்சுத் திட்டு'களில் புதுவை மக்களின் விடுதலை முழக்கம்

ஆணவ அதிகாரிகளின் 'அத்து மீறிய செயல்கள்' அதிகரிக்கின்றன

புதுச்சேரி, ஏப். 7—

புதுவையில், பிரெஞ்சு சர்க்கார் பூட்டும் போன் விலங்கைக் கண்டு பூரித்த காலம் மலையேறிவிட்டது!

பட்டம் பதவிக்கு ஆசைப்பட்டோ, சிறை—குண்டுகளுக்கு அச்சமடைந்தோ, அடிமைத் தளைகளை உடைத்தெறிய மனமின்றி, கொத்தடிமையாக இருக்க, இன்று, ஒரு கட்சியும் அங்கு இல்லை!

மக்கள், கட்சிகளைக் கடந்து நிற்கிறார்கள்; எந்த ஒரு கட்சியும் மறுக்கொணாத ஒரு இலட்சியத்துக்குக் கட்டுப்பட்டு நிற்கிறார்கள்!

இந்த எஃகுக் கோட்டையை சாகசமோ, சதித் செயலோ, பணமோ, பதவியோ, பட்டாளமோ அசைக்க முடியாது!

விடுதலை இனி நிச்சயமாகிவிட்டது; தாயகத்துடன் இணைவது, இனி, யாராலும் தடுக்க முடியாததாகிவிட்டது!

தாயகம், 'இழந்த இடங்களை' மீண்டும் பெறத்தான் போகிறது! இதனைத் தடுத்திடும் ஆற்றல் யாருக்கும் இல்லை!!

இந்தியப் பிரதேசத்தின் மத்தியில் திட்டுப் பகுதியாக உள்ளதும், புதுச்சேரிக்கு மேற்கே இருப்பதும், 23,000 மக்கள் தொகை கொண்டதுமான மண்ணடிப்பேட்டை கொம்யூனில் உள்ள 22 கிராமங்களின் மக்கள், தாங்களாகவே செயலில் இறங்கி, பிரெஞ்சு ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று, சுய ஆட்சி நடைபெற முடிவு செய்தனர்.

இதற்கு முன், பாகூர் பகுதியில் 10 கிராமங்களும், நெட்டப்பாக்கம் பகுதியில் 19 கிராமங்களும், பிரெஞ்சு ஆட்சியை ஒழித்து, சுதந்திரப் பிரகடனம் செய்துள்ளன.

"அந்நியரின் அடக்குமுறைக்கும், சரணடலுக்கும் அடங்கியிருக்க இனி எங்களால் இயலாது; எங்கள் பூமியை நாங்களே ஆள்வோம்."

—என்று, இப்பகுதி கந்தலான அணியைச் சுற்றியிருக்கும் மண்ணடிப்பேட்டை கொம்யூனின் மக்கள் முழங்கினர்.

★

பிரெஞ்சிந்திய அதிகாரிகள் தந்திரம்

ஆசிரியர்களுக்கு நிர்ப்பந்தம்

இதற்கிடையே, பிரெஞ்சிந்திய அதிகாரிகள், பிரெஞ்சுப் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட நெட்டப்பாக்கம் கம்யூனைச் சேர்ந்த பள்ளிக்கூட ஆசிரியர்களைத் தந்திரமாகப் புதுச்சேரிக்கு வரவழைத்து, நிர்ப்பந்தமாக அங்கு

(4-ம் பக்கம் பார்க்க)

கோவா மக்களின் சுதந்திர முழக்கம்

போர்ச்சுகல் சர்க்கார் கையாளும் அடக்குமுறையின் விபரீதம்

சான்றுகள் காட்டி இந்தியா கண்டனம்

புதுடில்லி, ஏப்ரல் 7—

"டாக்டர் பி. செப் பாண்டே கண்ணியமான மனிதர்; அவர் பலாத்கார நடவடிக்கைகளில் இறங்கியதாகப் புகார் எதுவும் கிடையாது; மக்களின் தேசிய உணர்ச்சிகளை பிரதிபலித்தார், வெளியே எடுத்துச் சொன்னார் என்பதற்காக அவரைக் கைது செய்து நாடுகடத்தியதே, கோவாவில் பேச்சு சுதந்திரமும், ஜனநாயக அரசியல் நடவடிக்கைகளும் மறுக்கப்படுகின்றன என்பதற்கும் போதிய சான்றாகும்; எனவே, இந்தியாவிலுள்ள போர்ச்சுகீசிய திட்டுப் பகுதிகளில் அமைதி நிலவுவதாகவும், மக்களுக்கு எல்லா உரிமைகளும் தரப்படுவதாகவும் போர்ச்சுகீசிய சர்க்கார் கூறுவதை, இந்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள இயலாது."

—என்று போர்ச்சுகல் சர்க்காருக்கு இந்திய சர்க்கார் அனுப்பிய குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்குறிப்பில் மேலும் கூறியுள்ளதாவது:—

கோவாவில் நடைபெறும் சம்பவங்களினால் இந்திய மக்களிடையே ஏற்படும் விளைவுகளை இந்திய சர்க்கார் கவனிக்கவேண்டியிருக்கிறது. இந்தியாவில் உணர்ச்சி வேகம் கடுமையாக இருக்கும் விஷயங்களில், இந்திய சர்க்கார் எப்போதுமே ரொம்ப அடக்கம் காட்டி நடந்துவர முயற்சி செய்து வந்திருக்கிறது.

சில இந்தியப் பகுதிகளில் தொடர்ந்து அந்நிய ஆதிக்கம் இருந்து வருவது, அடக்குமுறைகளால் அந்த ஆதிக்கம் நீடிக்க முயற்சிப்பது, இவற்றின் தவிர்க்க முடியாத விளைவே மக்களின் அந்த உணர்ச்சியாகும்.

மருத்துவ மனையில் கல்லக்குடி தோழர்கள்

கல்லக்குடி வழக்கில் தண்டனை பெற்று திருச்சி மத்திய சிறையில் இருக்கும், தோழர்கள் அம்பில் தர்மலிங்கம், வேலூர் (சேலம்) சதாசிவம் ஆகியவர்கள் உடல் நலக் குறைவின் காரணமாக திருச்சி தலைமை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தோழர்கள் பராங்குசம், திராவிடப் பண்ணை முத்துகிருஷ்ணன் முதலியவர்கள் மேற்படி தோழர்களைச் சந்தித்துப் பேசி வந்தனர்.

தோழர் தர்மலிங்கத்திற்கு நெஞ்சு வலியின் காரணமாகப் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், தோழர் சதாசிவத்திற்கு இரணியா அறுவை சிகிச்சை செய்யப்பட்டு குணமடைந்து வருவதாகவும் தெரிகிறது. [ந. நி]

வரவு—செலவு திட்டம்

இந்தியில் அச்சியற்ற வேண்டுகோள்

தலைவரால் நிராகரிக்கப்பட்டது

பாட்டியாலா, ஏப். 7—

பாட்டியாலா சட்ட சபையில், அரசாங்க வரவு—செலவுத் திட்டத்தை இந்தியிலும், பஞ்சாபியிலும் அச்சியற்றி வெளியிட அரசினர் தவறிவிட்டதைப் பற்றி விவாதிக்க, தாரா சிங் குல்சான் என்ற உறுப்பினரால் கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தை, சட்ட சபையின் தலைவர், அத்தீர்மானம் அவசரமானதல்ல என்று கூறி நிராகரித்துவிட்டார்.

ரத்து செய்யப்படும்

டாக்கா, ஏப். 6—

கிழக்கு வங்க பொதுஜன பந்தோபஸ்து சட்டம் ரத்து செய்யப்படும் என்று முதல் மந்திரி பஸ்லுல் ஹக் இன்று தெரிவித்தார்.

"மக்கள் சக்தியை மதித்து அதிகாரத்தை மாற்றுங்கள்"

நேச முறையில் நேருவின் புத்திமதி

புதுடில்லி, ஏப்ரல் 6—

"பிரெஞ்சிந்தியப் பகுதிகளை பிரெஞ்சு அரசாங்கம் உடனடியாக இந்தியாவுடன் இணைக்க வேண்டும்" என்று பண்டித நேரு வலியுறுத்தியுள்ளார்.

பிரெஞ்சிந்தியாவில் பல பகுதிகளில் ஆட்சியை மக்கள் கைப்பற்றி உள்ளனர். அப்பகுதிகளை எல்லாம் இந்திய அரசாங்கம் கைப்பற்றிக்கொள்ள உத்தேசித்திருக்கிறதா என்று பிரெஞ்சு அரசாங்கம் கேட்டிருப்பதாகவும் அப்படி நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் கிடையாது என்று இந்திய அரசாங்கம் பதில் அனுப்பியுள்ளதாகவும் நேரு கூறினார்.

ஆனால் இந்தியாவுக்குள் பிரெஞ்சு போலீஸ் நுழையத் தடை நீடிக்க வேண்டும் என்று இந்திய அரசாங்கம் வற்புறுத்தியுள்ளதாகவும் நேரு தெரிவித்தார்.

"கடந்த சில தினங்களாக பிரெஞ்சிந்தியாவில் போராட்டம் வலுத்துவருகிறது. பிரெஞ்சு அடக்குமுறைகளை மீறி இயக்கம் வலுத்துவருகிறது. இந்தப் போராட்டம் வெளியார் தூண்டுதல் இல்லாமல் மக்களாகவே நடத்துவது; இதற்கு நாம் அனுதாபப்படுவது இயற்கை; ஆனால் இந்தப் போராட்டத்தில் இந்திய அரசாங்கம் தலையிடாது."

"பிரெஞ்சிந்திய விவகாரத்தை அமைதியாகத் தீர்க்கவே விரும்புகிறோம். ஆனால், இந்திய எல்லைக்குள் பிரெஞ்சு போலீஸ் நுழையக் கூடாது என்ற தடையை நீக்க முடியாது."

விடுதலையான தலைவர் மீண்டும் கைது!

'பிரெஞ்சு' ஆதிபத்திய அடக்குமுறை

மாஹி, ஏப். 6—

மகாஜன சபை தொண்டரும், விடுதலை இயக்கத் தலைவருமான திரு. பி. கே. உஸ்மான், 1948-ல் நிகழ்ந்த பிரெஞ்சு எதிர்ப்புப் போராட்டம் சம்பந்தமாக ஐந்தாண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருந்து, அண்மையிலே தான் விடுதலை செய்யப்பட்டிருந்தபோதிலும், மறுபடியும் பிரெஞ்சு போலீசாரால் இன்று மீண்டும் கைது செய்யப்பட்டார்.

அவரே, மாஹி பகுதியில் தோன்றிய விடுதலை இயக்கத்தின் முதல் வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

பி. ஏ. பரீட்சை எழுதும் அந்தகர்கள்!

அப்துல் ஹமீது, சையத் எம். ஹுசேன் என்ற இரண்டு கண் தெரியாத மாணவர்கள் சர்க்கார் ஊமை, செவிடு, குருடர் பள்ளியின் மூலம் இவ்வாண்டு பி. ஏ. பரீட்சை எழுதுகின்றனர்.

மணி ஓசை கேட்கிறது!

ஆச்சாரியாரின் புதுக் கல்வி ஆலோசகர் கௌரவ பதவியினின்று விலகுகிறார்!

புதிய கல்வி அமைச்சருக்கு இடையூறாக இருக்க விரும்பவில்லையாம்!

சென்னை, ஏப்ரல் 6—

சென்னை அரசாங்கத்தின் ஆரம்ப அடிப்படைக் கல்வி ஆலோசகராக, ஆச்சாரியார் ஆட்சியில் நியமிக்கப்பட்டிருந்த ஜி. இராமச்சந்திரன் அவர்கள், தமது கௌரவ பதவியினின்றும் விலகிக்கொண்டு விட்டார் என்று தெரிகிறது. அரசாங்கம் அவரது திறமையும், பயனும் மிக்க பணியினைப் பாராட்டும் குறிப்போடு, அவரது விலகலை (ராஜினாமா) ஏற்றுக்கொண்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 7—4—54 புதன்

இந்தி வாழாது!

இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு அரசுகளிலும் கையாளப்படும் கல்வி முறைகளிலும், தேர்வுகளிலும் கையாளப்பட வேண்டிய மொழிக் கொள்கை குறித்து காங்கிரஸ் செயற்குழு அண்மையில் ஒரு தீர்மானத்தை வெளியிட்டுள்ளது.

அதன்படி, தொடக்க நிலையில் ஆரம்பப் பள்ளிகளில் குழந்தைகளின் தாய் மொழியில்தான் பாடம் கற்பிக்க வேண்டும். இது பெரும் பகுதியும் வட்டார மொழியே யாகும். இரு மொழி, பன்மொழிப் பகுதிகளான அரசுகளின் எல்லைப் பகுதிகளில், எந்த ஒரு வேற்று மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களும் ஒரு குறிப்பிட்ட விகி...

அறிந்துகொள்வது குதிரைக் கொம்பேயாகும்.

மேலும், இந்தியா முழுவதும் பரவியுள்ள எந்தச் சிறு நாகரிகப் பண்பாட்டையும் ஆங்கிலத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம். உலகப் பொது மொழியாக, ஆங்கிலம் முக்கியத்துவம் பெற்றிருப்பது மட்டுமல்ல; இந்தியப் பொது மொழியாகவும்—முன்னர் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக—ஆங்கிலமே இயற்கையாக அமைந்திருக்கிறது.

மேலும், நாமே விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அடியோடு கைவிட்டுவிட முடியாத அளவுக்கு, அது, விஞ்ஞானம் முதலிய அற்புத அறிவுச் செல்வங்களைக் கொண்டிருக்கிறது.

இங்கிலையில், தேசிய மொழி என்று சொல்லிவந்த வீம்புக்காக மட்டுமே 'இந்தியைக்' கட்டாயப்படுத்துவதும், ஆங்கிலத்தை—உடனே முடியாத காரணத்தால்—சிறிது சிறிதாகக் கைகழுவத் திட்டமிடுவதும் அறியாமையோ, அன்றி ஆதிக்க வெறியோ ஆக வேண்டும்.

போருக்குச் செல்லும் வீரன், குதிரையில் ஏறிச் சவாரி செய்யப் பலநாள் பழகிப் பயிற்சி பெற்றபின், சங்கநாதம் கேட்டு, உடுப்புக்களை அணிந்துகொண்டு, துப்பாக்கியைத் தூக்கித் தோளிலே வைத்துக்கொண்டு, வாயிலிலே வந்து நின்றதும், திடீரெனத் தோன்றிய ஒரு எண்ணத்தின்படி, பணியாளைப் பார்த்து, "கொண்டு போ, இக் குதிரையை; இது அரபிய நாட்டினின்று வந்தது; வெளிநாட்டுக் குதிரையில் ஏறி என் தாய் நாட்டைக் காக்கும் போருக்குச் செல்வதா? கூடாது; நம் நாட்டில் பிறந்தது எதுவானால்...

மதுவிலக்குத் திட்டம்

எதிர்கால நிலை என்ன?

புதுடில்லி, ஏப். 5—

மதுவிலக்கு திட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதா? அல்லது கைவிடுவதா?—என்ற பிரச்சினை குறித்து, காங்கிரஸ் செயற்குழு, மாநில அரசுகள் அனைத்தும், மதுவிலக்குத் திட்டத்தை எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்று தெரிவித்துள்ளது.

அண்மையில் ஆந்திர அரசு, திரு இராமமூர்த்தி தலைமையில, அதற்கென்றே ஒரு ஆய்வுக் குழு நியமித்ததும், அதன் முடிவுப்படி—இப்பொழுதுள்ள மதுவிலக்குத் திட்டம் கலைக்குதவாது, தீமையே விளைவு என்றும் மதுவிலக்கை எடுத்துவிடுவதே நல்லது என்றும் முடிவுகள் கூறப்பட்டதை அனைவரும் அறிவர். ஆனால், அம்முடிவை நிறைவேற்...

இலங்கை தி. மு. கழகப் பொறுப்பாளர் அறிக்கை

இலங்கை தி. மு. கழகப் பொறுப்பாளர் தோழர் இரா. அதி. மணி இலங்கை தி. மு. கழகத் தோழர்களுக்குக் கீழ்க்கண்ட வேண்டுகோள் விடுத்துள்ளார் :—

சில நாட்களாக இலங்கை எங்கும் தி. மு. கழகக் காரியாலயங்களையும், நிர்வாகிகளையும் போலீசார் சோதனையிட்டு வருவதாக அறிகிறேன். நிர்வாகிகளைப் பல கேள்விகள் கேட்கப்படுவதாகவும், சில பத்திரிகைகளும், பிரசாரங்களும் போலீசாரால் எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாகவும் கிளைக் கழகங்களிலிருந்து தகவல்கள் வந்துள்ளன.

இது, இலங்கையில் தி மு க அடைந்துவரும் வளர்ச்சி யாருக்கெல்லாமோ வயிற்றெரிச்சலைக் கிளப்பி இருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது.

பொதுவாக இலங்கை தி மு கழகத்திற்குத் தேவைப்படும் தனி சட்டதிட்டங்கள் இனிமேல்தான் உருவாகப் போகின்றது. அதற்குள்ளாக ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கின்ற கிளைக் கழகங்கள் தங்களின் தேர்தல்களை முறைப்படி நடத்தி முடித்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் பேரில், இப்பொழுது கிளைக் கழகங்களின் தேர்தல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

புதிய நிர்வாகிகளின் தேர்தல் ஏறத்தாழ ஏப்ரல் 30-க்குள் நடைபெற்று முடிந்துவிடுமென நம்புகின்றேன். அந்தக் கிளை கழகங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு பொதுக்குழு தான், இலங்கை தி. மு. க. தலைமைக் கழக நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கும். அந்த நிர்வாகிகள்தான் இலங்கைக்கு ஏற்ற முறையான ஒரு சட்டதிட்டத்தைத் தயாரித்துத் தருவர்.

அதற்குள் அவசரப்பட்டு ஆட்சியினரோ, அல்லது போலீசாரோ, வேண்டாத நடவடிக்கைகளிலீடுபட்டு இயக்கத்தை ஒழித்துக் கட்ட முனைந்தால் அது வருத்தத்தக்கதாகும்; வெற்றி காணவும் முடியாததுமாகும் என்று, தெரிவிக்க ஆசைப்படுகின்றேன்.

இதுவரை இயக்கம் இலங்கையில் எந்த ஒரு கட்சியுடனும் தொடர்பு கொள்ளவில்லை; இனியும் அவ்வாறே இயங்குமென நம்புகின்றேன்.

இலங்கை அரசியலிலோ, அல்லது தொழிற் சங்க நடவடிக்கைகளிலோ இயக்கம் இதுவரை ஈடுபடவில்லை; இனி மேலும் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை.

சமூக சீர்திருத்தம், பேதமற்ற வாழ்வு, தமிழ்த் தொண்டு, ஒழுக்கம் இவைகளையே எடுத்துக்கூறி மக்களை விழிப்படையச் செய்திருக்கின்றோம்.

இந்தத் தொண்டும் எவருடைய மனதையும் புண்படுத்தாமல், எந்த ஒரு கட்சியினரையும் பகைக்காமல் அமைதியான பெருந்தன்மையான முறைகளிலேயே நடைபெற்று வந்திருக்கிறது.

இன்னும் வள்ளுவர் வகுத்த அறநெறியையும், புத்த பிரானின் புதுமைக் கொள்கைகளையுமே உண்மையான முறையில் எடுத்தோதி வந்திருக்கிறோம். இது பழமை விரும்பிகளுக்கும், பாசாங்குக் காரர்களுக்கும் கொஞ்சம் பயத்தை உண்டு பண்ணுவது இயற்கைதான்!

திராவிடம் (தென்னாடு) பிரிந்து தனி நாடாக அரசோச்ச வேண்டுமென்பதை முழு மனதுடன் இலங்கை தி மு கழகம் ஆதரிக்கின்றது; ஆனால் இலங்கையில் அப்படிப்பட்ட பிரிவினையை கழகம் மேற்கொள்ளவில்லை.

தமிழ் முழக்கம் செய்வதும் சிங்கள மொழியை ஒழிப்பதற்காக அல்ல; தான் வாழவேண்டுமென்று எண்ணுவது, பிறர் ஒழிய வேண்டுமென்று கூறுவதாகாது. தமிழ் மொழியும் வாழவேண்டும் சிங்கள மொழி போன்று என்பதுதான் எங்கள் எண்ணம். சிங்களத்தையும் தமிழையும் அரசியல் மொழிகளாக அரசாங்கமே ஏற்றிருப்பதும் அனைவரும் அறிந்ததே.

தி.மு. க. புத்தகங்களை தடைப்படுத்த வேண்டுமெனச் சிலர் விரும்புவதாகத் தெரிகிறது இது, சிப்பை மறைத்துவிட்டால் திருமணத்தை நிறுத்திவிடலாம் என்ற அசட்டு எண்ணத்தைப் போன்றது. பொதுவாக அறிவு நூல்களுக்குத் தடை விதிப்பது, மக்களின் அறிவுக்குத் தடை விதிப்பது என்பதாகும். ஆகையால், இந்த எண்ணத்தை ஆட்சியினர், மாற்றிக்கொள்வர் என்றே நம்புகின்றேன்.

கம்யூனிஸ்டுகளின் தொடர்போ, ஆதரவோ உள்ளவர்களல்ல இலங்கை தி. மு. கழகத்தினர். சதித் திட்டங்களோ, இரகசிய ஏற்பாடுகளோ, அற்றவர்கள். இது இலங்கை போலீசாரின் குறிப்பேடுகளிலேகூடக் காணலாம்.

ஆங்காங்குள்ள தி. மு. க. தோழர்கள், அமைதி, கட்டுப்பாடு, கண்ணியம், கடமை இவைகளை உணர்ந்து உண்மையுடன் தொண்டாற்றி வெற்றி காண வேண்டுமென்பதோடு, ஆட்சியினர் ஏதாவது அறிந்துகொள்ள வேண்டுமென விரும்பினால் அன்பு கூர்ந்து அவர்கட்கு உண்மையான தகவல்களை அறிவித்து நமது கண்ணியத்தை உயர்த்தும்படிக் கேட்டுக்கொள்கிறேன்."

'நாகரிகத்தின் முதுகெலும்பு முறிந்துவிடும்'

நீர்வளிக் குண்டு—அட்லி கண்டனம்

'சமாதான முயற்சிக்குச் சாதகமாகும்' என சர்ச்சில் துரைமகனார் சப்பைக்கட்டு!

"மனித நாகரிகத்துக்கே இன்று மாபெரும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது; உலகின் பெரிய நகரங்களை அழிக்கக்கூடிய ஒரு புதிய ஆயுதத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அமெரிக்காவிடம் இந்த ஆயுதம் இருக்கிறது; ரஷ்யாவிடமும் இருப்பதாக நம்புகிறோம். சில ஆண்டுகளில் வேறு பல நாடுகளும் இதை தயாரிக்கக்கூடும். பெரிய தொழில் நகரங்கள் இங்கு உள்ளன. ஒரே குண்டில் அழியக்கூடிய அபாயம் அவற்றுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஹைட்ரஜன் குண்டுகள் சகிதம் யுத்தம் நடந்தால் மனித நாகரிகத்தின் முதுகெலும்பு முறிந்து விடும்,"

—என்று, ஹைட்ரஜன் குண்டு பற்றியும், அதன் சூழ்நிலை பற்றியும் உலகுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை பற்றியும் விவாதிக்க அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா அதிபர்கள் சந்தித்துப் பேச வேண்டுமென்று காமன்ஸ் சபையில், எதிர்க் கட்சித் தலைவர் அட்லி ஒரு பிரேரேபணையைக் கொண்டுவந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

பிரேரேபணையை நிராகரித்து சர்ச்சில் பேசுகையில், குறிப்பிட்டதாவது:—

ஹைட்ரஜன் குண்டு சோதனைகளால் யுத்த அபாயத்தைவிட சமாதான சாத்தியங்களே அதிகரிக்கும்; இம்மாதம் முழுவதும் நடக்க இருக்கும் இந்தச் சோதனைகளை நிறுத்துமாறு அமெரிக்காவை நான் கேட்க முடியாது; இந்த சோதனைகளில் கட்டுக்கடங்காத சக்தி வெளியாவதாகக் கூறுவது தவறு."

"அமெரிக்காவில் ஏராளமான ஹைட்ரஜன் குண்டுகள் தயாரிக்கப்படுகின்றன; இதைவிடச் சற்று குறைந்த சக்தியுள்ள குண்டுகள் ரஷ்யாவிலும் ஏராளமாக தயாரிக்கப்படுவதாக நம்புகிறோம்"

"இந்த பிரம்மாண்டமான சோதனைகளை பசிபிக் பகுதியில் நடப்பது பற்றி நமக்குக் கவலை இருக்கிறது; ஆனால், சைபீரியாவில் (ரஷ்யாவில்) அவற்றை நடத்துவதற்குப் பதில் பசிபிக்கில் நடத்துவது நல்லது என்றே எல்லோரும் ஒப்புக் கொள்வர், என்றார்.

மக்களின் பொறுமையைச் சோதிக்காதே!

"தமிழ் நாட்டின்" மனக் கொதிப்பு

"தமிழ்நாட்டில், தமிழ்ப் பெயர்தான் முதலிலிருக்க வேண்டும்; இந்திப் பெயரல்ல; தமிழ் மக்கள் மனத்தில் இந் நினைவு, உணர்ச்சியுடன் ஓடிக் கொண்டிருக்கிறது"

"தமிழர்கள் உணர்ச்சி வயப்பட்டு, இரயில்வே நிலையப் பலகைகளை உடைத்து, தீயிட்டுக் கொளுத்துகிற அளவுக்கு அவர்களுடைய பொறுமையைச் சோதிக்கக் கூடாது."

"கிளர்ச்சிகளின் மூலம்தான் மாறுதல்கள் ஏற்படுத்தலாம் என்ற கருத்துக்கு அரசாங்கத்தார் இடம் கொடுக்கக்கூடாது."

"அறிவு நிலையில் கூறும் ஆலோசனைகளுக்கு இணங்குவதே நல்லரசின பண்பாகும்."

—இவ்வாறு, 5-4-54 'தமிழ் நாடு' இதழ் தனது அணைத் தலையங்கத்தில் எழுதியுள்ளது. மேலும் அது குறிப்பிடுவதாவது :—

"இந்தி மொழிக்குச் சிறப்புக் கொடுக்க வேண்டுமென்று பல தலைக் கழகங்களும், மாகாண அரசாங்கங்களும், இந்திய அரசாங்கமும் அரும்பாடுபட்டு வருகின்றன. ஆனால், அதற்கு முதலிடம் கொடுத்திருப்பது இரயில்வே நிலையங்கள்தான் என்று கூறலாம்.

"தமிழ்நாட்டில் பல இடங்களில், இரயில்வே நிலையப் பெயர்கள் முதலில் இந்தி மொழியிலும், பிறகு ஆங்கிலத்திலும், இறுதியில் தமிழிலும் இருந்து வருவது, தமிழர்களுக்கு மனக் கொதிப்பை உண்டாக்கி வருகிறது.

"தமிழ்நாட்டில் தமிழுக்குத்தான் முதலிடம் கொடுக்க வேண்டும்; பிறகு ஆங்கிலத்தில் இரயில்வே நிலையப் பெயர்கள் இருக்கலாம்; கடைசியில் இந்தி மொழிப் பெயர்கள் இருக்க வேண்டும்.

"இதை விட்டுவிட்டு, முரணான, ஒழுங்கற்ற முறையை இரயில்வே நிலையங்கள் பின்பற்றி வருகின்றன.

"இதைக் குறித்து இந்திய அரசாங்கத்தின் இரயில்வே இலாகா கவனம் செலுத்த வேண்டுமென்று விரும்புகிறோம்.

★★

தஞ்சை மாவட்ட இரண்டாவது திராவிட முன்னேற்றக் கழக

சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

★

தஞ்சையில் A. Y. அருளானந்தசாமி நாடார் தோட்டத்தில் அமைத்துள்ள பன்னீர்ச்செல்வம் பந்தலில் — அழகிரி அரங்கில் 10, 11-4—54-ந் தேதிகளில் நடைபெறும்

10-4—54 சனி :	11—4—54 ஞாயிறு :
சமூக சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர் : ஏ. கோவிந்தசாமி, எம். எல், ஏ.	தலைவர் : என். வி. நடராசன்
துவக்குபவர் : க. அன்பழகன்	துவக்குபவர் : ஈ. வெ. கி. சம்பத்

இரு நாட்களிலும்—தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், மு. கருணாநிதி, சி. பி. சிற்றரசு சி. மனோகரன், அ. பொன்னம்பலனார், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். எஸ். இளங்கோ, ஏ. கே. வேலன், தில்லை வில்லாளன், எஸ். சுயம்பிரகாசம், எம். எல். ஏ., கே. ஆர். சம்பந்தம், எல். எல், ஏ., எம். பி. சுப்பிரமணியம், எம். எல். ஏ., வேலு, எம். எல். ஏ., பழனியாண்டி, எம். எல். ஏ., எஸ். பி. தங்கவேலு, எம். எல். ஏ. தோழியர்கள் இராமாமிர்தத்தம்மையார், சத்தியவாணிமுத்து ஆகியோர் கலந்துகொள்வார்கள்

சி. எஸ். ஜெயராமன், நாகூர் அனீபா, கே. ஆர். செல்லமுத்து இசை நிகழ்ச்சிகள் இரு நாட்களிலும் நடைபெறும்

★

இரு நாட்களிலும் கே. ஆர். ராமசாமி குழுவினர் நடிக்கும் நாடகங்கள்

10—4—54 சனி இரவு :	11—4—54 ஞாயிறு இரவு :
"காதல் ஜோதி"	"ஓர் இரவு"

இரு நாட்களுக்கும் அனுமதி விவரம் :—(நாடகங்கள் உட்பட)

வரவேற்பாளர் ரூ. 5, பிரதிநிதி ரூ. 2, பார்வையாளர் ரூ. 1. பெண்களுக்கு அ. 8

குறிப்பு :— ...வுக்குத் தனிக் கட்டணம் இரு நாட்களுக்கும் ரூ 2—8—0

★★

திருநெடுஞ்சேரியில் தி. மு. கழகத் துவக்கம்

சிதம்பரம் வட்டம் திருநெடுஞ்சேரியில் தி. மு. கழக ஆரம்ப விழாவும், கழக அமைப்புக் கூட்டமும் நடைபெற்றது. அதுபோது, செயலாளராக என். இராசன், துணைச் செயலாளராக பி. இராமச்சந்திரன், பொருளாளராக கே. அண்ணாமலை, மாவட்டப் பிரதிநிதியாக பி. மாசிலாமணி, ஆகியோரும், செயற்குழு உறுப்பினர்களாக கோ. கிருட்டினன், ரா. இராமன், செயாராமன், பெ. ராஜரங்கம், கு. பொன்னுசாமி, இரங்கநாதன், இரா. நாகராஜன், பெ. கலியபெருமாள், அ. தாமோதரன், கோ. காசிநாதன், வை. பட்டுசாமி, இ. பூராசாமி, மா. முருகேசன், பழனிசாமி, க. கோவிந்தராசு, வெள்ளையன், க. கணேசன் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

துவக்க விழாப் பொதுக்கூட்டம்

மாலை 6-30 மணிக்கு மாவட்ட செயலாளர் ஆர். பாலகுருசாமி தலைமையில் பொதுக்கூட்டமும், ஏக. தாமோதரனால் கொடியேற்று விழாவும் நடைபெற்றது. தோழர்கள் சி. பி. சிற்றரசு, சொக்கலிங்கம், எம். என். இளங்கோ, எல். என். ராமலிங்கம், முருகேசன், இரா. சிவநேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தோழர்கள் சாமிக்கண்ணு, எம். எல். ஏ., அவர்கள் செல்வி, வி வி. தனுஷ்கோடி ஆகியோர் இயற்கை யெய்தியமைக்கும் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வேண்டுகோள்

★

தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்காக இதுவரை தலைமை தி. மு. கழகத்திற்கு அனுப்பிய நிதி வசூல் தொகை விபரங்களை 'நம் நாடு' இதழில் வெளியிட்டுள்ளோம்.

மேலும் செங்கற்பட்டு, கோவை, திருநெல்வேலி, வட ஆற்காடு, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களின் வசூல் தொகைகள் பாக்கியுள்ளவைகளை செயலாளரிடமிருந்து விபரங்களுடன் விரைவில் அனுப்பி வைத்தால் 'நம் நாடு' இதழில் வெளியிட்டு இறுதியாக வரவு - செலவு கணக்கு விபரங்களையும் வெளியிட்டுவிடலாம். திருநெல்வேலியிலே நம்மிடம் தூத்துக்குடிவழக்கு நிதிக்காக ரூ. 750 வரை வசூலாகி இருப்பதாகவும், பொதுச்செயலாளர் வருகை தேதி குறிப்பிட்டால் தொகையை அனுப்புகின்றோம் என்றும். நேரில், சென்னையிலும் காஞ்சிபுரத்திலும் வந்து கூறினர்

பொதுச் செயலாளர் அவர்கள், திருநெல்வேலி தூத்துக்குடி நகரங்கள் சம்பந்தப்பட்டவரையில் வசூல் தொகை வந்தால்தான் தேதி குறிப்பிட முடியும் என்பதை காஞ்சியிலும் திருச்சியிலும் நேரிலும், பிறகு கடிதங்கள் மூலமும் அறிவிக்கப்பட்டும் இன்றளவும் எவ்வித பதிலும் வரவில்லை இதுபோல் மற்றும் சிலரின் விவரம் பிறகு வெளிவரும்.

இந்த நிலைமை நீடிக்கக் கூடாது என்பதையும், வருத்தத்துடன் கூறி, தூத்துக்குடி வழக்கு நிதி வசூல் செய்த தொகைகளைக் கருணை கூர்ந்து, இனியும் தாமதியாமல் உடனே அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

தூத்துக்குடி வழக்குநிதி பொறுப்பாளர், 7—4—'54 | தி. மு. கழக தலைமை நிலையம் இராயபுரம், சென்னை—13.

கழகக் கூட்டங்கள்

★

எடமேலையூர்

8—4—54 வியாழன் மாலை

பேசுபவர்:
சி. பி. சிற்றரசு

★

கடலூர்

9—4—54 மாலை 6 மணிக்கு

இடம்: மஞ்சை நகர் மைதானம்

தலைவர்: ஆர். சுந்தரம், எம். சி.

பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
இரே. இளம்வழுதி
ஏ கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.

தெ.பி.ரெ. முன்னணிப்படை தொழிலாளர் சங்கம்,

4–வது ஆண்டு மாநாடு

10, 11—4—54 நாட்களில் பொன்மலையில் மேற்படி மாநாடு நடைபெறும்.

10.4-54 மாலை 5 மணிக்கு, மேஜர் ஜெனரல் அழகப்பா தலைமைவகிப்பார். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், பேராசிரியர் இலக்குவனார், ஜெகதீசன் முதலியோர் சொற்பொழிவாற்றுவர்.

11—4—54 மாலை 5-30 மணிக்கு, லெப்டினண்ட் கர்னல் ஜோகேந்திர சிங், எம்.பி. தலைமையில் தோழியர் ஜோதி வெங்கடாசலம் திறப்பு விழா வாற்றுவார். தோழர்கள் ஏ. எல். ராஜன், எம. பழனியாண்டி, எம். எல் ஏ., கே. டி. கே. தங்கமணி ஆகியோர் பேசுவர்.

Phone: 40 Grams: "ILWA"

SHORT-TERM COURSES

As in previous years, Six weeks short term vacational courses in Automobile Service Engineering and Radio Service Engineering will be conducted from 3rd May to 14th June.

Ten Seats are reserved for girl-students upto 14th April.

For particulars and prospectus apply to:—

PRESIDENT.
INDUSTRIAL LABOUR WELFARE ASSOCIATION LTD.,
1-4-'54 AVANASHI ROAD, COIMBATORE.

"நம் நாடு" வெளியூர் ஏஜெண்டுத் தோழர்கட்கு:

"நம் நாடு" வெளியூர் ஏஜண்டுத் தோழர்கட்கு: மார்ச்சு மாதப் பட்டியல் ஏப்ரல் முதல் தேதி அனுப்பியுள்ளோம். ஏப்ரல் 10-ந் தேதிக்குள் பில் பாக்கியை அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

பழைய பாக்கியுள்ள தோழர்களும், டெபாசிட் தொகைக்கு மேல் அதிகம் பாக்கியுள்ள ஏஜண்டுத் தோழர்களும் மேலும் காலம் கடத்தாமல் பாக்கியை உடன் அனுப்பி வைக்க வேண்டுகின்றோம். இன்றேல், "நம் நாடு" இதழ் அனுப்புவதையும் நிறுத்தி, வேறு ஏஜண்டை நியமிக்கும்படி நிலைமை ஏற்பட்டுவிடும் என்பதையும் உணர்ந்து நடந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இராயபுரம், சென்னை 7—4—54 | பொறுப்பாளர், 'நம் நாடு'

பம்பாய் நகராட்சி மன்ற காங்கிரசில் பிளப்பு

மேலும் விரிகிறது

பம்பாய் நகராட்சி மன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் பட்டேலின் போக்கை எதிர்த்து, கண்டித்து, முன்னரே நான்கு உறுப்பினர்கள் விலகினர்.

திங்களன்றே, அந்த நால்வரை ஆதரித்து, மேலும் இருவர்—டாக்டர் தப்டாரி, டாக்டர் சதர்புஜ பட்டேல் என்பவர்கள் காங்கிரஸ் கட்சியினின்றும் விலகிவிட்டனர். மேலும் பல உறுப்பினர்கள் விலகத் தீர்மானித்திருப்பதாகவும், சில நாட்களில் விலகியவர் எண்ணிக்கை, 12-ஐயும் மிஞ்சும் என்றும் தெரிகிறது.

இதன் விளைவாக, சுயேச்சையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பின்னர் காங்கிரஸ் கட்சியோடு ஒட்டு உறுப்பினர்களாகச் சேர்த்து கொண்ட சமுவர், தமது நிலை குறித்துக் கவலை கொண்டுள்ளனர் என்று தெரிகிறது.

காங்கிரசின் பலம் கரைவதே ஒட்டு உறுப்பினர்கள் ஆவலைக் குலைக்கும் காரணம்!

அம்மிக் கல்லே தெறிக்கும் போது அடியிலே கிடக்கும் செங்கற்களைப் பாதுகாக்கவா முடியும்?

என்றாலும், காங்கிரசின் பிளப்பை, (பதவிப் பேராசை என்னும்) பசை தடவி, ஒட்டி வைக்க; முயற்சியும் நடைபெறுகிறதாம்!

சென்னை மேல்சபைக்கு இடைத் தேர்தல்

சென்னை, ஏப். 6—

மதுரை—இராமநாதபுரம்—திருநெல்வேலி ஸ்தலஸ்தாபனத் தொகுதியில் திரு. உடையப்பா காலமானதால் ஏற்பட்ட சென்னை மேல் சபை காலிஸ்தானத்திற்கு இடைத் தேர்தல் நடைபெறும்

ஏப். 19-ந் தேதி அபேட்சகர் பத்திரம் தாக்கல் செய்ய கடைசி நாளாகும்.

என்ன காரணமோ?

பெர்லின் ஏப். 6—

ஜெர்மனியில் அமெரிக்க மண்டலத்தில் நேற்று கைது செய்த இரு அமெரிக்க வீரர்களை ரஷ்யர் இன்று விடுவித்துள்ளனர்.

அடிமை விலங்கு...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தங்கும்படி செய்கின்றனர்; ஆசிரியர்களை வரவழைத்த பின்னர், அவர்களுடைய குடும்பங்களையும் அழைத்துக்கொள்ளும்படி கூறி ஆம்புலன்ஸ் வண்டிகளை அனுப்பினர்; ஆனால், அந்த வண்டிகளை சோஷலிஸ்டுத் தலைவர்கள் கைப்பற்றிவிட்டனர். மேற்கொண்டு என்ன சம்பவங்கள் நடக்குமோ என்று ஆசிரியர்கள் குடும்பங்கள் அவதியுற்ற நிலையிலுள்ளன.

கண்காணிப்பு!

புதுச்சேரிக்குள், பிரெஞ்சிந்திய இரகசியப் போலீசார் வெகு தீவிரமாக இருக்கிறார்கள்; பஸ், ரயில்வே நிலையம், கடைவீதிகள் முதலிய இடங்களிலெல்லாம் அவர்கள் நிறைந்திருக்கிறார்கள்

புதுச்சேரிக்குச் செல்லும் பஸ்களை எல்லையில், பிரெஞ்சிந்தியப் போலீசார் தடுத்து நிறுத்தி சோதனையிடுகின்றனர். சந்தேகமான நபர்களை எல்லாம் புதுச்சேரிக்குள் நுழைய போலீசார் அனுமதிக்கவில்லை.

பெட்ரோல் பறிமுதல்

புதுச்சேரியிலுள்ள பெட்ரோல் பூராவையும் பிரெஞ்சிந்திய அரசாங்கம் எடுத்துக்கொண்டது; இதனால் பல வண்டிகள் ஓடாமல் முடங்கிக் கிடக்கின்றன. புதிய நபர்கள் யாராவது வந்தால், உடனே தகவல் கொடுக்கும்படி டாக்சி டிரைவர்களுக்கு போலீசார் உத்திரவிட்டிருக்கின்றனர்.

புதுச்சேரியில் மாலை 6-மணிக்கு மேல் பொதுமக்கள் எவரும் வெளியே வருவதில்லை

கூபேர் கைது செய்யப்படுவார்?

கூபேருக்கு அளிக்கப்பட்டிருந்த பிரெஞ்சு சட்டசபை உறுப்பினருக்கான அந்தஸ்து ரத்து செய்யப்பட்டது; இதனால் அவர் கைது செய்யப்படலாம் என்று தெரிகிறது.

மேயர்மீது வழக்கு

புதுச்சேரி மேயர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட முத்துப்பிள்ளை மீதும், கவுன்சிலர் பதவியிலிருந்து விலக்கப்பட்ட முத்து குமரப்ப ரெட்டியார் மீதும் வழக்குத் தொடர யுதவ மாஜிஸ்திரேட் உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.

மேயர்கள் நீக்கம்!

மண்ணாடிபேட்டை, நெட்டப்பாக்கம் பகுதிகளின் மேயர்களான வெங்கடசாமி ரெட்டியார், வெங்கடசுப்பா ரெட்டியார் ஆகியவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

மாஹியில் விடுதலைப் போர்?

மாஹியைப் பிரெஞ்சு சர்க்காரிடமிருந்து விடுவிக்க அமைதியான முறையில் போராட்டம் நடத்துவதென மாஹி மகாஜன சபை சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

திருமணம்

மாயூரம், ஏப். 7—

9—4—54 காலை 7 மணியளவில், அரிவளூர் பஞ்சாயத்து போர்டு தலைவர் பி. கோபாலகிருஷ்ணன் தலைமையில், அரிவளூர் தோழர் இராமனுக்கும் தோழியர் விசாலாட்சிக்கு திருத்திய திருமணம் நடைபெறும். 'திருமணத்தில் நாம்' எனும் பொருள் பற்றி தோழர் மாயூரம் எம். வி. ஏ பாண்டியன், மிசனெளி, துரைராஜ், உதயகுமார், இராஜன் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்துவர்.

கமிட்டி தேர்தலில் தகராறு!

பி. – சோ. கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர்!

எர்ணாகுளம், ஏப். 5—

திரு—கொச்சி மாநில பி.—சோ. கட்சி மாநாட்டில் புதிய நிர்வாகக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டபோது, பழைய நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர் ஆர். எம். மனக்களத் தேர்தலை ஒத்திவைக்கும்படி கோரித் தீர்மானம் ஒன்றை பிரேரித்தார்

விவாதத்திற்குப் பிறகு தீர்மானம் வோட்டுக்கு விடப்பட்டு தோற்கடிக்கப்பட்டது. தீர்மானத்தை ஆதரித்த 35 பேர் வெளியேறினர். புது நிர்வாகக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது.

'மொழிவாரி மாநிலப் பிரிவினை ஆராயும் குழுவிடம் நியாயம் கிடைக்காது',

—— (:) ——

டாக்டர் எம். ஆர். ஜெயகர் கருத்தறிவிக்கிறார்

பூனா, ஏப். 4—

"மொழியின் அடிப்படையில் மாநிலங்களைப் புனரமைப்புச் செய்வது பற்றிய சிக்கலில் தங்கள் கருத்துக்களை ஏற்கனவே வெளிப்படையாக அறிவித்துவிட்ட இருவர், மொத்தம் 3 பேரைக் கொண்டுள்ள இக்குழுவில் இடம் பெற்றிருப்பதைக் கண்டு நான் வருந்துகிறேன்,"

—இவ்வாறு, மாநிலங்களைத் திருத்தி அமைப்பதற்கென்று நிறுவப்பட்டுள்ள உயர்ந்த அதிகாரங்களைக் கொண்ட மாநில புனரமைப்புக் குழு அமைக்கப்பட்ட விதத்தையும் அது இயங்கி வரும் முறையைப் பற்றியும் பூனா பல்கலைக் கழகத் துணை வேந்தரான டாக்டர் ஜெயகர் கண்டித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுவதாவது:—

"தாங்கள் பரிசீலனை செய்யவிருக்கும் ஒரு விஷயத்தினைப் பற்றி, இவர்களிருவரும் ஏற்கனவே சில கருத்துக்களைக் கொண்டவர்களாக யிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது."

"எந்த உண்மையை இக்குழு அறிய விரும்புகிறது என்பதை மக்கள் உணர்ந்து கொள்ளச் செய்ய வேண்டி, இதுபோன்ற குழுக்கள், கேள்விப் பட்டியல் ஒன்றினை மக்களுக்கு விடுமென்று சாதாரணமாக எதிர்பார்க்கப்பட்டு வந்தது"

"தனிப்பட்டவர்களிடமிருந்தும், சம்பந்தப்பட்ட கட்சிகளிடமிருந்தும், சாட்சியங்களை இக்குழுவினர் பெறுவது அவசியமானது."

"இவ்விஷயத்தின் ஆழ்ந்து யோசித்து விசாரணை நடத்தாமல், இக்குழுவினர், சாதாரண விவாதங்களை நடத்தி வருகின்றனர்," என்றும் அவர் தெரிவித்தார்.

மணி ஓசை.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'மெயில்' நிருபரிடம் அவர் கூறுகையில், "அடிப்படைக் கல்வித் திட்டத்தை நிறைவேற்ற புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் வழிவகுக்கும் என்று கருதியே, அடிப்படைக் கல்வித் திட்டத்தில் உள்ள பற்றுதலால் பதவி ஏற்றதாகவும், ஒருவேலைக் கல்வி முறையும் தொழிற் பயிற்சியும் எந்தப் புதிய ஆரம்பக் கல்விச் சீர்திருத்தத்திலும் இடம் பெற்றே தீரும்," என்றும் கூறியுள்ளார்.

மேலும், "ஆச்சாரியார் அமைச்சர் குழாம் வெளியேறுவதால், புதிய அமைச்சர் குழு இந்தக் கல்வித் திட்டத்தைப் பற்றி எப்படி முடிவு செய்யும் என்பது தெரியவில்லை; புதிய கல்வி அமைச்சராக வருபவருக்கு நான் ஒரு தடையாக (சிக்கலாக) இருக்க விரும்பாததாலேயே எனது ராஜீநாமாவை அளித்துவிட்டேன்," என்றும் தெரிவித்துள்ளார்.

புதிய அமைச்சருக்குத் தமது கடமையைச் செய்வதற்குரிய தடையுங்கூடத் தானாகவே விலகுகிறது, தனக்கே புரிய புத்திசாலித் தனத்தால்! ஆச்சாரியார் அப்படிப்பட்ட 'புத்திசாலிகளாகத் தானே' தேர்ந்தெடுப்பார்? நல்லவேளை, அவருக்கும் பதவி ஆசை பலமாக ஏற்படவில்லை!

பொதுமக்களோ, 'யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே,' என்ற பழமொழியை எண்ணிக் களிப்படைகிறார்கள்.

ஆனால் வாஇருப்பது யானையா, அல்லது புதுக் காடியா என்பது பொருத்துத்தானே பார்க்க வேண்டும்? என்றாலும், இந்த மணி ஓசை—ராஜீநாமா புதுக் கல்வித் திட்டம் ஒழிக்கப்படும் என்று அறிவிப்பதுபோலவே இருக்கிறது.

பாட்டியாலா, ஏப். 5—

நிதி கஷ்டம் காரணமாக மதுவிலக்கு திட்டம் எதையும் அமுல் நடத்தப்போவதில்லை என்று பெப்சு நிதிமந்திரி கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, ... நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: ... அண்ணாத்துரை, எம். ஏ.